# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.7/2020

பி.வா.சா.2– குறுக்கு விசாரணை – நாள் 29–01–2026.

பெயர் = சிவனாண்டி

பி.வா.சா.–2 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் கு.வி.–

(1) நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் அருப்புக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் துணை வட்டாட்சியராக பணியாற்றுகிறேன். புல வரைபடம் 1992ல் தயாரிக்கப்பட்டுள்ளது. புல வரைபடத்தை பற்றி எனக்கு நேரடியாகத் தெரியுமா என்றால் ஆவணத்தை வைத்து எனக்குத் தெரியும். சாட்சி சொல்ல வருவதற்கு முன்பாக தாவா 1,2 லக்கச்சொத்தை நான் பார்வையிட்டேன் என்றால் சரிதான். சர்வே பற்றி எனக்கு சொல்லத்தெரியுமா என்றால் ஆமாம் எனக்கு பயிற்சி கொடுத்துள்ளார்கள். தாவா 1வது லக்கச்சொத்து சர்வே எண்.203/42 என்றால் சரிதான். 1வது லக்கச்சொத்தில் வாதி வீடு கட்டி குடியிருக்கிறார் என்றால் ஆமாம். 1ம் வாதியின் கணவர் சின்னஅழகன் பெயரில் பட்டா உள்ளது என சாட்சி கூறுகிறார். 1வது லக்கச்சொத்திற்கு வடக்கே பாதை உள்ளது. பாதைக்கு வரைபடத்தில் அளவுகள் குறிப்பிடவில்லை என சாட்சி கூறுகிறார். சர்வே எண்.203/42க்கு வடக்கே பூமியில் பாதை இல்லை என்றால் சரியல்ல. அதில் பாதையை பொதுமக்கள் பயன்படுத்துகிறார் என சாட்சி கூறுகிறார். சர்வே எண்.203/42க்கு வடக்கே 9 அடி பாதை கிழமேல் 9.6 மீட்டர் தென்வடல் 2.2 மீட்டர் அளவு உள்ளது என சாட்சி கூறுகிறார். நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தில் வடக்குபக்கம் பாதை இருப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்து ஆணையர் பார்வையிட்டு அளந்த விவரம் எனக்குத் தெரியாது.

(2) ஆணையர் அறிக்கையை நான் படித்துப்பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆணையர் அறிக்கையில் வரைபடத்தில் உள்ளவாறு பூமியில் அமைப்புகள் இல்லை என அறிக்கை தாக்கல் செய்துள்ளது சரியா தவறா என்றால் தவறு என சாட்சி கூறுகிறார். வரைபடத்தில் உள்ளவாறு பூமியில் அமைப்புகள் இல்லை ஆணையர் சரியாக அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவாச்சொத்திற்கு வடக்கே 9 அடி பாதை

இருப்பதாக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் பாதை இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றாலும், பொதுமக்கள் பாதையை உபயோகிக்கவில்லை என்றாலும் சரியல்ல. சர்வே எண்.203/42 க்கு கிழக்கே 203/43 உள்ளது என்றால் சரிதான். அந்த கிழக்கே உள்ள இடத்தை வாதி தான் வேலி போட்டு அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல சர்க்கார் புறம்போக்கு காலியிடமாக உள்ளது. அந்த இடத்தை சுற்றிலும் வேலிபோடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.203/42 ல் தான் வேலி போடப்பட்டுள்ளது. சர்க்கார் புறம்போக்கு காலியிடத்திற்கு வடக்கே சர்க்கார் ரோடு உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.203/42, 203/43 ஆகியவை பூமியில் ஒரே சேகரமாக உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.203/42, 203/43 இடையில் வேலி உள்ளதா என்றால் இல்லை. சர்வே எண்.203/42 ன் வடக்கே பாதை அதற்கு வடக்கே சர்வே எண்.203/22 உள்ளது என்றால் சரிதான்.

(3) சர்வே எண்.203/22 அழகுமால் என்ற பொன்னாள் என்பவர் பெயரில் பட்டா எண்.71 உள்ளது. அழகுமால் என்ற பொன்னம்மாள் என்பவரின் பெயரில் இருந்து 1 ம் வாதி மீனாட்சி பெயருக்கு பட்டா மாறுதல் செய்யலாம் என வா.சா.ஆ.7 ன்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.203/42, 203/22 இரண்டும் வாதிகளின் சொத்து என்றால் சரிதான். சர்வே எண்.203/42 ற்கும், சர்வே எண்.203/22 ற்கும் இடையில் உள்ள பாதைக்கு தான் நாங்கள் வழக்கு நடத்துகிறோம் என்றால் ஏற்கனவே அது பாதையாக இருந்து மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என சாட்சி கூறுகிறார். சர்வே எண்.203/42, 203/22 ஆகிய சொத்துக்களைப்பொறுத்து வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பு பிறப்பிப்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.203/23 காலிமனையாக உள்ளது அது வாதிகளுக்கு பாத்தியமானது அல்ல என நாங்கள் எதிர்வாதம் செய்கிறோம் என்றால் சரிதான். நத்தம்புறம்போக்கில் வீடுகளுக்கு மட்டும்தான் பட்டா கொடுப்போமா என்றால் காலிமனைகளுக்கும் கொடுப்போம் என சாட்சி கூறுகிறார். கிரையப்பத்திரம் இருந்தால் அவர்களுக்கு இணையதளத்தில் விண்ணப்பம் செய்தால் பட்டா கொடுப்போம். நத்தம்புறம்போக்கிற்கு கிரையப்பத்திரம் இருந்தால் பட்டா வழங்கமாட்டோம் என சாட்சி கூறுகிறார். நத்தம் சர்வே 1991 ல் நடந்தது என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை என சாட்சி கூறுகிறார்.

(4) பொதுவாக யார் கிரையப்பத்திரம் வைத்திருந்தாலும் அவர்களுக்கு பட்டா கொடுக்க அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.203/23, 203/43 ஆகிய இரண்டு இடங்களுக்கும் வாதிகளின் பெயரில் பத்திரம் உள்ளது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. சர்வே எண்.203/22 க்கு வடக்கே சர்வே எண்.203/1 உள்ளது. சர்வே எண்.203/1 வீதியாக உள்ளது. அந்த வீதி தென்வடல் 2 மீட்டர் (6 அடி), கிழமேல் 120.4 மீட்டர் உள்ளது. அந்த வீதிக்கும் வடக்கே சர்வே எண்.203/15 உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.203/15 சண்முகவேல் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீதியின் வழியாக பேருந்து வந்து செல்லும் என்றால் சரிதான். 6 அடி இடத்தில் பஸ் வந்து செல்ல வாய்ப்புகள் இல்லை என்றால் சரிதான். சர்வே வரைபடம் தவறாக உள்ளது என்றால் சரியல்ல. சர்வே வரைபடத்தில் உள்ளபடி பூமியில் அமைப்புகள் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.01.29 17:41:53 +0530